**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**நாள்: 05.08.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

நாட்டில் எரிவாயு உற்பத்தி, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் மக்களின் எண்ணங்களை நிறைவேற்ற, அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழலுக்கு உகந்த ஆயிரத்து 500 புதிய பயிர் ரகங்களை உருவாக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் வளர்ச்சி ஏற்பட, மாநில அந்தஸ்து அவசியம் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், மணிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா உள்ளிட்டோர் அடங்கிய இந்திய மகளிர் டேபிள் டென்னிஸ் அணி, காலிறுதி நிலைக்கு தகுதி பெற்றுள்ளது.

--------------------------

மோடி-எரிவாயு (12)

நாட்டில் எரிவாயு உற்பத்தி, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்ட, எரிசக்தித் துறையில் சுயசார்பு மிக முக்கியம் என்றும், இந்த இலக்கை நோக்கி பயணிப்பதில் நாட்டிற்கு உள்ள மன

உறுதிக்கு இந்த சாதனையே சான்றாகும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். இந்த சாதனையுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். 2020-21ஆம் ஆண்டில், 28.7 பில்லியன் கன மீட்டராக இருந்த இந்தியாவின் எரிவாயு உற்பத்தி, 2023-24ஆம் ஆண்டில், 36.43 பில்லியன் கன மீட்டராக சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாக, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, முன்னதாக, சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்தார் 2026ஆம் ஆண்டில் இது, 45.3 பில்லியன் கன மீட்டராக அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது.

---------------------------

*மோடி-மின்னணு (11)*

இந்தியாவில் இருந்து மின்னணு உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி, அதிகரித்து வருவது குறித்தும், தற்போது, நாட்டின் முதல் 3 உற்பத்தி பொருட்களின் பட்டியலில் மின்னணு பொருட்கள் திகழ்வது குறித்தும், பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். மின்னணு பொருட்களின் ஏற்றுமதி குறித்து, மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவை பிரதமர் சுட்டிக் காட்டி, இந்திய மின்னணுத் துறையின் திறனுக்கு, புதுமையாக்க ஊக்கம் நிறைந்த இளையோர் சக்தியே காரணம் என்றார். மின்னணு உற்பத்தித் துறையில், தற்போது ஏற்பட்டுள்ள உத்வேகத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல, இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

---------------------------

மோடி-காஷ்மீர் (12)

ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் மக்களின் எண்ணங்களை நிறைவேற்ற, வரவிருக்கும் காலங்களிலும் அரசு தொடர்ந்து பாடுபடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். 2019ஆம் ஆண்டு இதே ஆகஸ்ட் 5ஆம் தேதியில்தான், அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவையும், 35-ஏ பிரிவையும் நீக்க, நாடாளுமன்றம் முடிவெடுத்ததை சுட்டிக் காட்டி, பிரதமர் இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இவ்வாறு கூறியுள்ளார். ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கின் வளர்ச்சியில், புதிய சகாப்தத்தை தொடக்கி வைக்கும் வகையில், 370 மற்றும் 35-ஏ பிரிவுகள் நீக்கப் பட்டது, நாட்டின் வரலாற்றில் முக்கியத் தருணம் என்றும், அவர் தெரிவித்துள்ளார். இதனால், பெண்கள், இளைஞர்கள், பின்தங்கியப் பிரிவினர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு, புதிய வாய்ப்புகளும், கண்ணியம் மற்றும் பாதுகாப்பும் கிடைத்துள்ள அதே வேளை, ஊழலும் நீங்கி இருப்பதாக, பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

---------------------------

வேளாண்மை (19)

அடுத்த 5 ஆண்டுகளில், சுற்றுச் சூழலுக்கு உகந்த ஆயிரத்து 500 புதிய பயிர் ரகங்களை உருவாக்க, அரசு முயன்று வருகிறது. இத்தகைய 109 பயிர் ரகங்களை, வரவிருக்கும் நாட்களில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, விவசாயிகளுக்கு அர்ப்பணித்து வைப்பார் என்றும், மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் இன்று மாநிலங்களவையில், தமது

அமைச்சகத்தின் செயல்பாடுகள் பற்றிய விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் கூறினார். அடுத்த 5 ஆண்டுகளில், ஏற்றுமதி நோக்கம் கொண்ட தோட்டக் கலை சாகுபடி மண்டலங்கள், மொத்தம் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், 100 இடங்களில் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். ரசாயன உரங்களின் அதிகப்படியான பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து கவலை வெளியிட்ட அவர், விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறுதல் அவசியம் என்றும் வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு, ஆதார் போன்ற டிஜிட்டல் அடையாள அட்டை வழங்க, அரசு பரிசீலித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். பிஎம் கிசான் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபாய் நிதி உதவியினால், விவசாயிகளின் சுயசார்பும், அதிகாரப் பங்கேற்பும் மேம்பட்டு உள்ளதாக அவர் கூறினார். விவசாயிகளின் நலன் பற்றிய பிரச்சனையில், அரசை குறைகூறும் காங்கிரஸ் கட்சியின் முந்தைய ஆட்சியில்தான், விவசாயிகள் மீது, பல துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

---------------------------

பூபேந்திர யாதவ் (7)

**தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தில், அதிக அளவில் பங்கேற்க** அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதப் பட்டுள்ளதாக, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், நாட்டில் வனப்பரப்பை அதிகரித்து, சுற்றுச் சூழலை பாதுகாக்கும்

வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி உள்ள இந்த இயக்கத்தை வெற்றி பெற செய்ய, அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என கேட்டுக் கொணடார்.

---------------------------

*தபால் தலை (14)*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளை கொண்டாடும் வகையிலான 4 நினைவு தபால் தலைகளை மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிர்ராதித்யா சிந்தியா, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் இணைந்து, புதுடெல்லியில் இன்று வெளியிட்டனர். நாடு முழுவதும் விளையாட்டுத் திறமைகளை அரசு ஊக்குவித்து வருவதாகவும், விளையாட்டு வீரர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில், கேலோ இண்டியா போன்ற திட்டங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும், திரு. மன்சுக் மாண்டவியா கூறினார். பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கும் 117 விளையாட்டு வீரர்களில், 29 பேர் கேலோ இண்டியா விளையாட்டு போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிப் பிரிவில் பதக்கம் வென்ற சரப்ஜோத் சிங், ஸ்டீப்பிள்சேஸ் வீராங்கனை சுதா சிங், முன்னாள் கிரிக்கெட் வீரர் ஆகாஷ் சோப்ரா உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---------------------------

*துரைமுருகன்* (8)

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க, மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சி, வரவேற்கத்தக்கது என்று, தமிழக நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார். இன்று வேலூரில் 22 புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடக்கி வைத்த அவர், நிகழ்ச்சியில் பேசுகையில், இவ்வாறு கூறினார். பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கு வசதியான நேரத்தில் பேருந்துகள் இயக்கப் படுவதை, மாவட்ட நிர்வாகமும், போக்குவரத்துத் துறையும் இணைந்து உறுதிப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

----------------------------

*ரங்கசாமி* (15)

புதுச்சேரியில் வளர்ச்சி ஏற்பட மாநில அந்தஸ்து அவசியம் என்பதே அரசின் எண்ணம் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று சட்டமன்றத்தில, துணை நிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், மாநில அந்தஸ்து குறித்து நாடாளுமன்றம்தான் முடிவு செய்ய இயலும் என்பதால், நமது எம்பிக்கள் மாநில அந்தஸ்து கோரிக்கையை நாடாளுமன்றத்தில் வலியுறுத்த வேண்டும் என்றார். புதுச்சேரியில், ஏஃஎப்டி-சுதேசி-பாரதி பஞ்சாலை இடங்கள் உட்பட, பல இடங்களில், புதிய தொழிற்சாலைகளை கொண்டு வந்து, வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்றாலும், மாநில அந்தஸ்துப் பிரச்சனைதான் தடையாக இருப்பதாக, அவர் கூறினார்.

பல்வேறு சிரமங்களுக்கு இடையிலும் தமது அரசு வளர்ச்சித் திட்டங்கள், மற்றும், மக்கள் நலத் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் தெரிவித்தார். நலத் திட்டங்களின் அமலாக்கத்தில், நாட்டின் முன் மாதிரி மாநிலமாக புதுச்சேரி திகழ்வதாகவும் புதுச்சேரியில்தான், தனிநபர் வருமானம் அதிகம் என்றும், அவர் கூறினார்.

---------------------------

*புதுச்சேரி-சட்டமன்றம் 1 (18)*

முன்னதாக, துணை நிலை ஆளுநர் உரை மீதான விவாதங்களில் எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில், புதுச்சேரியில் புதிய தொழிற்சாலைகளை கொண்டு வர ஏதுவாக, புதிய சலுகைகளுடன் கூடிய தொழிற் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினார். 15 லட்சம் மக்கள் தொகை கொண்ட புதுச்சேரியில், மூன்றரை லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத நிலையை மாற்றுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்திற்கு உட்பட 3 மருத்துவக் கல்லூரிகளில், முதலாம் ஆண்டு தேர்வு திடீரென ரத்து செய்யப் பட்டதற்கு காரணம் வெளியிடப் படவில்லை என்றும், அரசு இது தொடர்பாக விசாரித்து, தேர்வு நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி பதில் அளித்தார்.

விவாதங்களின் போது, பிஜேபி குறித்து காங்கிரஸ் உறுப்பினர் திரு. வைத்தியநாதன் வெளியிட்ட ஒரு கருத்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்க, பிஜேபி உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் பேரில், சபாநாயர் திரு. ஆர் செல்வம் உத்தரவிட்டார். தொடர்ந்து, திமுக மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

*புதுச்சேரி-சட்டமன்றம்* 2 (4)

இன்றைய தினம், சட்டசபை நிகழ்வுகளை பள்ளி மாணவர்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக, வ.உ.சி பள்ளி, சுசீலாபாய் பள்ளி உள்ளிட்ட அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்கள், சட்டசபையின் பார்வையாளர் மாடத்தில் அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

---------------------------

*ஏனாம்* (7)

பிரதமரின் மத்ஸய சம்பதா திட்டத்தின் கீழ், ஏனாமில், இன்று மீன்வளத் துறை சார்பில் நடைபெற்ற ஒரு நாள் பயிற்சி முகாமில், மீன்பிடி படகுகளின் எஞ்சின்களை பழுது பார்ப்பது குறித்து, மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. விசாகப்பட்டினத்தில் உள்ள மத்திய மீன்வளப் பொறியியல் பயிற்சிக் கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், மீனவர்களுக்கு பயிற்சி அளித்தனர். ஏனாம் மண்டல நிர்வாக அதிகாரி திரு. ஆர். முனுசாமி பயிற்சி முகாமை தொடக்கி வைத்து, பயிற்சிக் கையேடுகளை மீனவர்களுக்கு வழங்கினார்.

---------------------------

*வயநாடு (9)*

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களில், உடல்களை தேடும் பணிகள், இன்று 7ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சம்பந்தப்பட்ட பகுதிகளை, 12 மண்டலங்களாக பிரித்து, மீட்புப் படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 15 மோப்ப நாய்களும், இதில் பயன்படுத்தப் படுகின்றன. நிலச்சரிவில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களில் இதுவரை அடையாளம் காணப்படாத 31 உடல்கள், புத்துமலா பகுதியில், இன்று அடக்கம் செய்யப்பட்டன. துண்டம் துண்டமாக கிடைத்த 158 உடல் உறுப்புகளும், மரபணு பரிசோதனைக்கு பின்னர், இன்று மாலை புதைக்கப் படுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

---------------------------

*வானிலை (18)*

தமிழக கடலோர பகுதிகளில் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், மணிக்கு 40 கிலோ மீட்டர் வரையிலான வேகத்துடன் கூடிய பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுச்சேரி பகுதியிலும் ஓரிரு இடங்களில், கனமழைக்கு

வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 11 ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

மன்னார் வளைகுடா உள்ளிட்ட தமிழக கடலோர பகுதிகளிலும், மத்திய வங்கக் கடல் உள்ளிட்ட வங்கக் கடல் பகுதிகளிலும், பலத்த காற்று சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கடலூர் மாவட்டம் வடக்குத்தில், 13 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், பத்துக்கண்ணு, திருக்கனூர், மற்றும், பாகூரில், தலா 4 செ.மீ மழை பெய்துள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில், 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

*ஒலிம்பிக் (7)*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், மணிக்கா பத்ரா, ஸ்ரீஜா அகுலா, அர்ச்சனா காமத் ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் டேபிள் டென்னிஸ் அணி, இன்று, ரோமானிய அணிக்கு எதிராக வெற்றி பெற்று, காலிறுதி நிலைக்கு தகுதி பெற்றுள்ளது. ஆடவர் ஒற்றையர் பேட்மிண்டன் பிரிவில் இன்று மாலை, இந்தியாவின் லக்க்ஷயா சென், வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில், மலேசிய வீரர் ஜி ஜியா லீ-யுடன் மோதுகிறார். மல்யுத்த போட்டியில், இந்திய வீராங்கனை நிஷா தாஹியா, இன்று மாலை களம் இறங்குகிறார்.

---------------------------

*கலைப் பொருள் (8)*

இந்தியாவில் இருந்து திருடி செல்லப்பட்ட 345 பழமையான கலைப் பொருட்கள், கடந்த 2014ஆம் ஆண்டிற்கு பிந்தைய காலத்தில், பல்வேறு வெளிநாடுகளில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கெஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். இதில் அதிகபட்சமாக 283 கலைப் பொருட்கள், அமெரிக்காவில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாக, அவர் இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். ஆண்டுவாரியாக பார்க்கையில், அதிகபட்சமாச கடந்த 2021ஆம் ஆண்டில், 151 கலைப் பொருட்கள் மீட்கப் பட்டதாக அவர் மேலும் கூறினார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டில் எரிவாயு உற்பத்தி, சாதனை அளவில் அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் மக்களின் எண்ணங்களை நிறைவேற்ற, அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழலுக்கு உகந்த ஆயிரத்து 500 புதிய பயிர் ரகங்களை உருவாக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் வளர்ச்சி ஏற்பட, மாநில அந்தஸ்து அவசியம் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில், மணிக்கா பத்ரா, ஶ்ரீஜா அகுலா உள்ளிட்டோர் அடங்கிய இந்திய மகளிர் டேபிள் டென்னிஸ் அணி, காலிறுதி நிலைக்கு தகுதி பெற்றுள்ளது.